




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ ஜூன். 30, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 266 ❖ ரூ.10


## நகராட்சி நிர்வாகத் துறை செயலராகப் பொறுப்பு வகிக்கும் சிவ்தாஸ் மீனா

# நியமனம்

## தலைமைச் செயலர் வெ.இறையன்பு இன்று ஓய்வு பெறுவதையடுத்து தமிழகத்தின் 49-வது தலைமைச் செயலராக பதவியேற்கவுள்ளார்

சென்னை, ஜூன். 30-

தமிழகத்தின் புதிய தலைமைச் செயலராக சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட்டுள்ளார். நகராட்சி நிர்வாகத்துறை செயலராகப் பொறுப்பு வகிக்கும் சிவ்தாஸ் மீனா, தமிழகத்தின் 49-வது தலைமைச் செயலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

2021-ம் ஆண்டு சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் திமுக வெற்றி பெற்றதை அடுத்து, மே 7-ம் தேதி தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார். அன்றே மாநில தலைமைச் செயலராக வெ.இறையன்பு நியமிக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகள் அவர் தலைமைச் செயலராகப் பணியாற்றிய நிலையில் இன்று (ஜூன் 30) ஓய்வு பெறுகிறார்.

அவர் ஓய்வுபெறும் சூழலில், புதிய தலைமைச் செயலர் யார் என்பது தொடர்பான எதிர்பார்ப்புகள் அதிகரித்தன. ஐஏஎஸ் அதிகாரிகள் பட்டியலில் முதல் நிலையில் உள்ள ஹன்ஸ்ராஜ் வர்மா, எஸ்.கே.பிரபாகர் மற்றும் சிவ்தாஸ் மீனா ஆகியோரது பெயர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.



இந்நிலையில், தற்போது நகராட்சி நிர்வாகத் துறை செயலராகப் பொறுப்பு வகிக்கும் சிவ்தாஸ் மீனாவை, தமிழகத்தின் தலைமைச் செயலராக நியமித்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. இவர் அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் ஓய்வு பெறுவார்.

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சிவ்தாஸ் மீனா 1989-ம் ஆண்டு ஐஏஎஸ் தேர்ச்சி பெற்று காஞ்சிபுரம் துணை ஆட்சியராக (பயிற்சி) தன் பணியை தொடங்கினார்.

1991-ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரை கோவில்பட்டி துணை ஆட்சியராக சிவ்தாஸ் மீனா பணியாற்றியுள்ளார். 1993-ம் ஆண்டு முதல் 1996-ம் ஆண்டு வரையில் வேலூர், கோவை மாவட்டங்களில் கூடுதல் ஆட்சியர் அந்தஸ்தில் ஊரக வளர்ச்சி, வருவாய் நிர்வாக செயலாளராக பணியாற்றியுள்ளார்

1998ம் ஆண்டு போக்குவரத்துத்துறை நிர்வாக இயக்குனராக இருந்த சிவ்தாஸ் மீனா நாகப்பட்டினம் மாவட்டத்தின் ஆட்சியராக நியமிக்கப்பட்டார். நாகப்பட்டினம் ஆட்சியராக மூன்று ஆண்டுகள் பணியாற்றிய நிலையில், 2001ம் ஆண்டு பதிவுத்துறையின் கூடுதல் பதிவாளராக நியமிக்கப்பட்டார்

சென்னை குடிநீர் வாரியத்தின் இயக்குநர், உணவுத் துறை, உயர்கல்வித் துறை, வணிக வரித் துறை இணை ஆணையராகவும் சிவ்தாஸ் மீனா பணியாற்றியுள்ளார்.

2015-ம் ஆண்டு கூட்டுறவு மற்றும் உணவுத் துறையின் முதன்மைச் செயலாளராக சிவ்தாஸ் மீனா நியமனம் செய்யப்பட்டார். 2017-ம் ஆண்டு மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்பட்ட சிவ்தாஸ் மீனா, வீட்டு வசதித் துறை கூடுதல் செயலாளராகவும், மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு மீண்டும் தமிழகப் பணிக்கு அழைத்துவரப்பட்ட சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் அந்தஸ்தில் நகராட்சி நிர்வாகத் துறையின் முதன்மைச் செயலாளராக பணியாற்றி வந்த நிலையில், தற்போது தமிழகத்தின் புதிய தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் முந்தைய திமுக ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது சிவ்தாஸ் மீனா அவருடன் நெருக்கமாகப் பணியாற்றிய அதிகாரி என்பதும், அதிமுக ஆட்சி அமைந்தபோது சிவ்தாஸ் மீனா அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவின் 4 தனிச் செயலாளர்களில் ஒருவராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பொது சிவில் சட்டம் தொடர்பாக

# "மதப் பிரச்சினையை அதிகமாக்க பிரதமர் மோடி முயற்சி" முதல்வர் ஸ்டாலின்



சென்னை , ஜூன். 30-

"மதப்பிரச்சினையை அதிகமாக்கி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வெற்றி பெற்றுவிடலாம் என்று பிரதமர் மோடி கருதிக் கொண்டிருக்கிறார்" என்று பொது சிவில் சட்டத்துக்கு எதிராக முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், பொது சிவில் சட்டம் குறித்த பிரதமர் மோடியின் வலியுறுத்தல் பற்றி பேசிய முதல்வர் ஸ்டாலின், "மணிப்பூர் மாநிலம், இன்றைக்கு மத்தியில் ஆட்சியில் இருக்கும் பிஜேபி ஆளுகிற மாநிலம். அந்த மணிப்பூர் மாநிலம் கடந்த 50 நாட்களாக எரிந்து கொண்டிருக்கிறது. 150 பேர் இதுவரை பலியாகியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் அந்த மாநிலத்தை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். இதுவரை பிரதமர் அந்தப் பக்கமே போகவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட 50 நாட்களுக்குப் பிறகுதான் அமித் ஷா நடத்தி இருக்கிறார். இதுதான் மத்தியில் ஆளும்பாஜக ஆட்சியின் லட்சணம்.

இந்த லட்சணத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பு பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லி இருக்கிறார். எனவே, ஒரு நாட்டினுடைய சட்டம் - ஒழுங்கைச் சீர்குலைக்க வேண்டும். மதக் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு நாட்டில் இரண்டு விதமான சட்டங்கள் இருக்கக் கூடாது என்கிறார் நம்முடைய மோடி. எனவே மதப் பிரச்சினையை அதிகமாக்கி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வெற்றி பெற்றுவிடலாம் என்று அவர் கருதிக் கொண்டிருக்கிறார்.

நான் உறுதியோடு சொல்கிறேன், நிச்சயமாக உறுதியாக வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சிக்கு சரியான பாடத்தை மக்கள் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். தயாராகிவிட்டார்கள்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

மேலும், பாட்னா கூட்டத்துக்கு பிறகு மோடிக்கு அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும், பாஜகவிற்கு சரியான பாடத்தை வழங்க மக்கள் தயாராகி விட்டார்கள் என்றும் பேசிய முதல்வர் ஸ்டாலின், குடும்ப அரசியல் குறித்து பிரதமர் மோடிக்கு பதிலளிக்கும் வகையில் பேசினார்.

# மணிப்பூர் கலவரம் பார்வையிடச் சென்ற ராகுல் தடுத்து நிறுத்தம்? மீண்டும் நடந்த வன்முறையில் 3 பேர் பலி

**மணிப்பூர் , ஜூன். 30-**

**மணிப்பூர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்திக்கச் சென்ற காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, அம்மாநில காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.**



மணிப்பூரில் மெய்டீஸ் இன மக்களை பழங்குடியின பட்டியலில் சேர்ப்பதற்கு குக்கி இனத்தவர் எதிர்ப்பு தெரிவித்துவரும்நிலையில், அம்மாநிலத்தில் கடந்த 2 மாதங்களாக தீ வைப்பு உள்ளிட்ட வன்முறை நிகழ்வுகள் தொடர்ந்து வருகின்றன.ஒன்றரை மாத காலத்துக்கும் மேலாக கலவரம் நீடித்துவரும் நிலையில், கலவரங்களால் 60 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறி அண்டை மாநிலங்களிலும், நிவாரண முகாம்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். 4 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் தாக்கப்பட்டுள்ளன.

மணிப்பூர் கலவரம் தொடர்பாக, எதிர்க்கட்சிகள் மத்திய அரசைக் கடுமையாகச் சாடி வருகின்றன. இதற்கிடையே 10 எதிர்க்கட்சிகள் பிரதமர் மோடிக்கு மணிப்பூர் கலவரம் தொடர்பாகக் கடிதம் எழுதியிருந்தன. இதைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இதுதொடர்பாக அனைத்துக் கட்சிகளும் அழைப்பு விடுத்திருந்தார். இக்கூட்டம் கடந்த 24ஆம் தேதி கூடியது. பிரதமர் மோடி இக்கூட்டத்தில் பங்கேற்காததால் காங்கிரஸும் கலந்துகொள்ளவில்லை. அதேநேரத்தில் மணிப்பூரின் முன்னாள் முதல்வர் ஓக்ராம்இபோபி சிங் கலந்துகொண்டு 8 அம்சங்கள் அடங்கிய மனு ஒன்றை அளித்தார்.

மேலும்இதில்பங்கேற்ற எதிர்க்கட்சியினர், மணிப்பூரில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக கட்சிகள் தங்கள் கருத்துகளை எடுத்துக்கூறின. மேலும், மணிப்பூருக்கு அனைத்துக் கட்சிக் குழுவை அனுப்ப கட்சிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டதாகத் தலைவர்கள் தெரிவித்தனர். பின்னர் இதைத் தொடர்ந்து அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் மோடி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது, மணிப்பூர் கலவரம் குறித்துப் பேசியதாகத் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், மணிப்பூரில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் மக்களையும் காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் ராகுல் காந்தி சந்திப்பதாக இருந்தது. இதற்காக அவர் நேற்று மணிப்பூர் சென்றார். மணிப்பூரின் கராசந்த்பூருக்குச் செல்ல முயன்ற ராகுல் காந்தியை பிஷ்ணபூரில் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். இதற்கு காங்கிரஸ் கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்து , காவல்துறையின் நடவடிக்கையை கண்டித்து , கட்சி தொண்டர்களும், அப்பகுதி மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ராகுல் காந்தி தடுத்து நிறுத்தப்பட்டது குறித்து மணிப்பூர் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் மேகசந்திரா ஆளும் பாஜகவை குற்றம்சாட்டியுள்ளார். மேலும் அவர், "ராகுலை வரவேற்பதற்காக சாலைகளில் பொதுமக்கள் நின்று கொண்டிருந்தனர். ஆனால் காவல்துறை ராகுலின் காரை அனுமதிக்க மறுத்துவிட்டனர். இது முதல்வரின் உத்தரவின் பேரில் நடைபெறுகிறது என தெரிகிறது. சட்டம் ஒழுங்கு சரியில்லை என ராகுல் உட்பட எங்களை உள்ளே ஆரம்பிக்க மறுக்கின்றனர். இதை அரசியலாக்குகிறார்கள்" என குற்றம்சாட்டியுள்ளார்.

ராகுல் காந்தி வருகையால் வன்முறை ஏற்படலாம் என்பதால் முன்னெச்சரிக்கையாகத் தடுத்துநிறுத்தப்பட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மணிப்பூர் காவல் துறை தடுத்து நிறுத்தியதை அடுத்து, ராகுல் காந்தி இம்பால் திரும்பினார். இதனிடையே இரண்டு நாட்களாக அமைதி நிலவி வந்த நிலையில், தற்போது மீண்டும் வன்முறை வெடித்துள்ளதாகதகவல் வெளியாகியுள்ளது. காம்போடி பகுதியில் போராட்டக்காரர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காயம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. தலைநகர் இம்பாலில் உள்ள மருத்துவமனையை சுற்றி காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழகத்தின் புதிய டிஜிபியாக சங்கர் ஜிவால் நியமனம்

சென்னை , ஜூன். 30-

தமிழகத்தின் புதிய டிஜிபி-யாகசங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக காவல் துறையின் புதிய தலைவராகவும், சட்டம் - ஒழுங்கு டிஜிபியாகவும் இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



தமிழக காவல் துறையின் தலைவராக இருக்கும் டிஜிபி சி.சைலேந்திரபாபு இன்று (ஜூன் 30) பணி ஓய்வு பெறுகிறார். ஏற்கெனவே, ஓர் ஆண்டு பணி நீட்டிப்பு பெற்று தற்போது அவர் பணி நிறைவு செய்கிறார். இதையடுத்து, புதிதாக சட்டம் - ஒழுங்கு டிஜிபியை தேர்வு செய்வதற்கான ஆயத்த பணி நடைபெற்று வந்தது. இந்நிலையில், புதிய டிஜிபிக்கான பட்டியலை தேர்வு செய்வற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 22-ம் தேதி டெல்லியில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக தலைமைச் செயலாளர் இறையன்பு, உள்துறைச் செயலர் அமுதா, தற்போதைய டிஜிபி சைலேந்திரபாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதிய சட்டம் - ஒழுங்கு டிஜிபிக்கான போட்டியில் சஞ்சய் அரோரா (டெல்லி காவல் ஆணையர்), பி.கே.ரவி ( ஊர் காவல் படை தலைவர்), சங்கர் ஜிவால் (சென்னை காவல் ஆணையர்),ஏ.கே. விஸ்வநாதன் (முன்னாள் சென்னை காவல் ஆணையர்), ஆபாஷ் குமார் (தீயணைப்பு துறை இயக்குநர்), சீமா அகர்வால் (தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணைய இயக்குநர்) உள்பட 10 பேர் இருந்தனர்.

இவர்களில் சஞ்சய் அரோரா, சங்கர் ஜிவால், ஏ.கே.விஸ்வநாதன் ஆகிய 3 பேரின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டன. இந்த 3 பேரில் ஒருவரை தமிழக அரசு தேர்வு செய்ய வேண்டும். இதன்படி, தமிழகத்தின் புதிய டிஜிபியாக சங்கர் ஜிவால் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்படி, தமிழக காவல் துறையின் புதிய தலைவராகவும், சட்டம், ஒழுங்கு டிஜிபியாகவும் சங்கர் ஜிவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யார் இந்த சங்கர் ஜிவால்? - உத்தராகண்ட் மாநிலத்தை சேர்ந்த சங்கர் ஜிவால் 1990-ம் ஆண்டு பேட்ச் ஐபிஎஸ் அதிகாரி. முதுநிலை மெக்கானிக்கல் இன்ஜினீயரிங்பட்டதாரி. தமிழ், ஆங்கிலம் மற்றும் உத்தராகண்டின் குமாவுனி மொழியில் புலமை பெற்றவர்.

இன்ஜினீயரிங்படித்து முடித்ததும்செயில் (ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா), பெல் (பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்) நிறுவனங்களில் சிறிது காலம் பொறியாளராக பணியாற்றினார்.பின்னர் ஐபிஎஸ் தேர்வில் வெற்றி பெற்று தமிழக பிரிவு ஐபிஎஸ் அதிகாரியாக தேர்வானார்.

சேலம், மதுரை எஸ்.பி., மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு மண்டல இயக்குநர், திருச்சிகாவல்ஆணையர், உளவுப்பிரிவு டிஐஜி,ஐஜி, சிறப்பு அதிரடிப்படை ஏடிஜிபி ஆகிய முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவர். அயல்பணியாக மத்திய அரசில் 8 ஆண்டுகள் பணிபுரிந்த இவர் பிறகு தமிழகம் வந்து அதிரடிப்படை ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டார்.

சிறந்த பணிக்காக 2 முறை குடியரசுத் தலைவரின் பதக்கம் பெற்றவர். சென்னையின் 108-வது காவல் ஆணையராக சங்கர் ஜிவால் 08.05.2021 முதல் பதவி வகித்து வந்த நிலையில், தற்போது இவர் தமிழக டிஜிபியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தென்னங்குடி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது





புதுக்கோட்டை, ஜூன்.30–

தென்னங்குடி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நேற்று நடைபெற்றது.

குலமாங்கல்ய நாட்டை சேர்ந்த புதுக்கோட்டை மாவட்டம் தென்னங்குடி ஸ்ரீ முத்துமாரியம்மன், விநாயகர், முருகன் ஆலய கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தையொட்டி கடந்த மூன்று நாட்களாக யாகசாலை பூஜைகள் துவங்கப்பட்டு கணபதி ஹோமம் உள்ளிட்ட பல்வேறு ஹோமங்கள் நடைபெற்ற நிலையில் நேற்று காலை 8:30 மணி அளவில் யானை, குதிரைகள் அணிவகுக்க மங்கள வாத்தியத்துடன் பூஜிக்கப்பட்ட நன்னீர் குடங்களை சிவாச்சாரியார்கள் கோபுரங்களுக்கு எடுத்து வந்து பூஜை செய்து 9.30 மணியளவில் புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று கோபுர தரிசனத்தை பயபக்தியுடன் தரிசித்தனர். கும்பாபிஷேகத்தை காண வருகை தந்த அனைவருக்கும் அருள் பிரசாதம் வழங்கப்பட்டு அதனை தொடர்ந்து அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது. அதனைதொடர்ந்து நேற்று இரவு விஜய் டிவி புகழ் செந்தில் கணேஷ் ராஜலட்சுமி குழுவினரின் இன்னிசை கலைநிகழ்ச்சி நடைபெற்றது. கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளை குலமாங்கல்ய நாட்டார்களும் கிராம பொதுமக்களும் சுற்றுவட்டார பொதுமக்களும் பங்கேற்று செய்திருந்தனர்.

# வறுமையில் தவித்தவருக்கு பாரத மிகுமின் நிறுவன ஊழியர்கள் ஆடுகள் வழங்கி ஆதரவு



திருமயம், ஜூன்.30–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் இயங்கி வரும் பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளையின் மூலமாக புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் பல்வேறு சமூக சேவைகளை செய்து வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் வாராப்பூரில் ஆதரவற்ற நிலையில் வசித்து வரும் மாசிலா என்ற பெண்மணி தனது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வசித்து வருகிறார். அவரது வறுமையை அறிந்த பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளையின் மூலமாக ரூபாய் பன்னிரெண்டாயிரம் மதிப்பிலான மூன்று ஆடுகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பசுமை தேசம் இயக்கத்தை சார்ந்தவரும் வாராப்பூர் பஞ்சாயத்து தலைவருமான சதிஷ் கலந்துக்கொண்டார்.

அறக்கட்டளையின் சார்பாக தலைவர் பாலாஜி, அறக்கட்டளையின் ஆதரவற்றோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குழுவின் நிர்வாகிகள் சந்தோஷ் குமார், மோகன், கதிரேசன், ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டனர். பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளையின் மூலமாக கொடுக்கப்பட்ட இந்த ஆடு எனது குடும்ப பொருளாதாரத்திற்கும் குழந்தைகளின் கல்வி செலவிற்கும் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்றும் உதவி வழங்கிய அறக்கட்டளைக்கு எனது குடும்பம் சார்ந்து நன்றியை தெரிவித்துக் கொள்வதாக பயனாளி மாசிலா தெரிவித்தார்.




# மதுரையில் தமிழ்நாடு நாடக நடிகர் சங்க பேரவை கூட்டம்



மதுரை, ஜூன்.30–

தமிழ்நாடு நாடக நடிகர் சங்க பேரவை கூட்டம் மதுரை பாண்டி கோவில் பகுதியில் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

தலைவர் கலைமாமணி கலைமணி தலைமை வகித்தார் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் முன்னாள் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்டோர் சங்க பணத்தை கையாடல் செய்ததாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்து அவர்கள் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது, கூட்டத்தில் செயலாளர் பாலசுப்பிரமணியன், பொருளாளர் பாலமுருகன் மற்றும் தமிழகத்திலிருந்து பல்வேறு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புளியங்குடியில் பக்ரீத் திருநாளை முன்னிட்டு

# மாமன்னன் திரைப்படத்தின் முதல் காட்சியை தொடங்கி வைத்து ரசிகர்களுக்கு லட்டு வழங்கி கொண்டாட்டம்



தென்காசி, ஜூன்.30–

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் பக்ரீத் திருநாளை முன்னிட்டு மீனாட்சி திரையரங்கில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும் திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் வெளிவந்த மாமன்னன் திரைப்பட காட்சியை தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி. சீனிவாசன், திமுக நகரச் செயலாளர் எ. அந்தோணிசாமி தலைமையில் ரசிகர்களுக்கு லட்டு வழங்கி முதல் காட்சியை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நகர அவைத் தலைவர் வேலுச்சாமி பாண்டியன், மாநில மருத்துவ அணி துணை அமைப்பாளர் எஸ்.எஸ்.செண்பக விநாயகம், வாசுதேவநல்லூர் சேர்மன் பொன் முத்தையா பாண்டியன், புளியங்குடி நகர்மன்றத்தலைவி விஜயா சௌந்தர பாண்டியன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், பரமசிவம், அன்பு ராஜன், அருணாச்சலம், ராஜராஜன், முருகராஜ், முகேஷ் விஷ்வா, முருகேசன் ஆசிரியர், பேராசிரியர் பழனிச்சாமி, நகர்மன்ற உறுப்பினர் நகரத் துணைச் செயலாளர் காந்திமதி அம்மாள், கவிதா மாரியப்பன், இளைஞரணி விக்ரம் மணிகண்டன், மாரிக்கனி, வெற்றிவேல், தகவல் தொழில்நுட்ப அணி சுந்தர், நகர் மன்ற உறுப்பினர் சமுத்திரம், ஜெகதீசன், சந்திரன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் மைதீன், பீர் ஒலி, தலைமை திமுக பேச்சாளர் மீனாட்சி சுந்தரம் 20-வது வார்டு நாகூர் கனி ஆகியோர் கலந்து கொண்டு மாமன்னன் திரைப்படம் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தனர்.

# ஓசூர் அரசு தலைமை மருத்துவமனையில் 'ஸ்ட்ரெச்சர்' இருந்தும் உதவியாளர் இல்லாததால் நோயாளிகள் பரிதவிப்பு



ஓசூர், ஜூன்.30–

ஓசூர் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளை அழைத்துச் செல்ல 'ஸ்ட்ரெச்சர்' வசதியிருந்தும், உதவியாளர்கள் இல்லாததால், அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் பரிதவிக்கும் நிலையுள்ளது. ஓசூர் அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளிகள் சிகிச்சை பெற 325 படுக்கை வசதிகள் உள்ளன. இங்கு 56 செவிலியர்கள், 26 மருத்துவர்கள் பணியில் உள்ளனர்.

இம்மருத்துவமனையில் சிகிச்சைபெற தினசரி ஓசூர் மற்றும் சுற்று வட்டார கிராமப் பகுதியிலிருந்து 500-க்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். இந்நிலையில், விபத்து, மகப்பேறு உள்ளிட்ட அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை ஆம்புலன்ஸில் இருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல 'ஸ்ட்ரெச்சர்' வசதி உள்ளது. ஆனால், நோயாளிகளை அழைத்துச் செல்ல உதவியாளர்கள் போதிய அளவில் இல்லை.

இதனால், அவசர சிகிச்சை மற்றும் பல்வேறு மருத்துவப் பிரிவுகளில் பரிசோதனை செய்ய நோயாளிகளை அவர்களது உறவினர்களே 'ஸ்ட்ரெச்சரில்' அழைத்துச் செல்லும் நிலையுள்ளது. இதனால், சிகிச்சைக்குவரும் நோயாளிகளுக்கு உரியப் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. எனவே, கூடுதல் உதவியாளர்களை நியமிக்க வேண்டும் என நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக மருத்துவ ஊழியர்கள் கூறியதாவது: ஓசூர் மருத்துவமனைக்குத் தினசரி கர்ப்பிணிகள் மற்றும் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை பெற 500-க்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். நடக்க முடியாமல் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை, 'ஸ்ட்ரெச்சரில்' படுக்க வைத்து அழைத்துச் செல்ல உதவியாளர்கள் இல்லை. இதனால், அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை, முன் அனுபவம் இல்லாத அவர்களது உறவினர்கள் பாதுகாப்பற்ற முறையில் அழைத்துச் செல்லும் நிலையுள்ளது.

அதேபோல, மருத்துவமனை வளாகத்தில் உயர் கோபுர மின் விளக்கு பழுதாகி 2 மாதங்களைக் கடந்தும், இதுவரை புதிய மின் விளக்குப் பொருத்த நடவடிக்கை இல்லை. இதனால், இரவு நேரங்களில் மருத்துவமனை வளாகம் இருளில் மூழ்கும் நிலையுள்ளது. கண்காணிப்புக் கேமராவும் செயல்படாமல் உள்ளது. நோயாளிகளின் நலன் கருதி உதவியாளர்கள் நியமனம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## "அண்ணாமலையின் நடைபயணத்தால்

# தமிழகத்தில் பாஜக வளர்ச்சியடையும்" மத்திய இணை அமைச்சர்



மதுரை, ஜூன்.30–

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நடைபயணம் மேற்கொள்ளும்போது, பாஜக மேலும் வளர்ச்சியடையும் என்று மத்திய இணை அமைச்சர் நாராயண சுவாமி கூறியுள்ளார்.

மதுரை மாநகர் மாவட்ட பாஜக வடக்கு தொகுதி அணி பிரிவு நிர்வாகிகள் மாநாடு மாவட்டத் தலைவர் மகா சுசீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மத்திய சமூக நலத்துறை இணை அமைச்சர் நாராயண சுவாமி பேசியவது: "மத்திய அரசின் நலத் திட்டங்களை வீடு வீடாக கொண்டு சேர்க்கின்ற பணியில் பாஜகவினர் ஈடுபட்டுள்ளனர். பிரதமர் மோடியின் கடுமையான உழைப்பால் இந்தியா உலக அளவில் பொருளாதாரத்தில் முன்னேறியுள்ளது.

உலகத் தலைவர்கள் பலருடன் இந்தியாவின் வளர்ச்சி குறித்து பிரதமர் மோடி பேசி வருகிறார். பாஜகவுக்கு இளைஞர்கள் ஆதரவு பெருகி உள்ளது. தமிழகத்தில் மாநிலத் தலைவர் அண்ணாமலை நடைபயணம் தொடங்கும்போது பாஜகவின் பலம் மேலும் அதிகரிக்கும். பிரதமர் மோடி 3-வது முறையாக பிரதமராவார்" என்று அவர் பேசினார்.

மாவட்ட பார்வையாளர் கார்த்திக் பிரபு, மாவட்ட துணைத் தலைவர் ஜெயவேல், மாவட்ட பொதுச் செயலாளர் ராஜ்குமார், இளைஞர் அணி தலைவர் பாரி ராஜா, மாநில கூட்டுறவு பிரிவு செயலாளர் பாஸ்கரன், மாவட்ட பொதுச் செயலாளர்கள் குமார், பாலகிருஷ்ணன், மகளிர் அணி தலைவி மீனா இசக்கிமுத்து, இளைஞர் அணி நிர்வாகிகள் அருண் பாண்டியன், முகேஷ் குமார், ஊடகப் பிரிவு தலைவர் ரவிச் சந்திர பாண்டியன் மாவட்ட துணைத் தலைவர் ஜோதி மாணிக்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆவுடையார்கோவில் அருகே கோவிணிகிடங்கு ஸ்ரீ மகாலிங்க மூர்த்தி சாமி ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது



ஆவுடையார்கோவில், ஜூன்.30–

ஆவுடையார்கோவில் தாலுகா கோவிணிகிடங்கு கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ மகாலிங்கமூர்த்தி, ஸ்ரீ ஜெகதாம்பாள், ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அப்பகுதி கிராம மக்களால் முடிவு செய்யப்பட்டது. இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 28ம் தேதி புதன்கிழமை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது.

அதனை தொடர்ந்து 2 நாட்களாக 3 கால யாக பூஜை நடைபெற்று வந்தது, விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனிதநீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது. அதனை தொடர்ந்து லோகநாத அய்யங்கார் தலைமையில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, கும்பாபிஷேகத்தைக்காண திரண்டிருந்த அப்பகுதியை சுற்றியுள்ள கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள் சாமி தரிசனம் செய்தனர், அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



▶ புதுக்கோட்டையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் இசை ஆசிரியையாக இருக்கும் .பா.சௌம்யா எண்ணற்ற ஏழை மாணவ, மாணவியர்களுக்கு கட்டணமின்றி இலவசமாக இசை பயிற்சி அளித்தமைக்காகவும், பல மாணவ, மாணவியர்களை மாவட்ட மற்றும் மாநில அளவில் இசையில் பல வெற்றிகளை பெற செய்தமைக்காகவும், சிறந்த இசை ஆசிரியையாக தனது கடமையை தொடர்ந்து செய்து வருவதற்காககவும்,மேலும் வெள்ளித் திரையிலும் தமது மாணவர்களை புது பாடகர்களாக களம் இறக்கியுள்ளார் என்பதற்காகவும், இசைத்துறையில் .பா.சௌம்யா விற்கு கௌரவ டாக்டர் பட்டத்தை ஓசூர் ரிசர்ச் பல்கலைக்கழகம் வழங்கி பாராட்டி கவுரவித்தது கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற .பா. சௌம்யா வை கல்வியாளர்கள், இசைவல்லுனர்கள் சமூக ஆர்வலர்கள் வாழ்த்தினர்.

# புதுக்கோட்டை அறம் லயன்ஸ் சங்கத்தின் முதலாம் ஆண்டு பணி ஏற்பு விழா




புதுக்கோட்டை, ஜூன்.30–

புதுக்கோட்டை அறம் லயன்ஸ் சங்கத்தின் முதலாம் ஆண்டு பணி ஏற்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது, தலைவர் லயன்ஸ். ஏ . அரவிந்த் தலைமை தாங்கினார், மாவட்ட ஆளுநர் ஏ ஆர் கே . சேது சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு 2023-24 ம் வருடத்தின் நிர்வாகிகள் லயன்ஸ். ஏ . அரவிந்த் தலைவராகவும் லயன்ஸ் எம்.பிரபு செயலாளராகவும் லயன்ஸ் ஜி.சந்திரசேகர் பொருளாளராகவும் உள்ளிட்ட நிர்வாகிகளை பணி அமர்த்தியும் சிறந்த சமூகசேவை விருதாளர்கள் பி.எஸ்.பக்கிரிசாமி மருத்துவர்.எஸ்ராமமூர்த்தி துணை ஆய்வாளர் மரிய சத்தோதிலக்ராஜ், மரம் ராஜா உள்ளீட்ட 6 பேர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டது.

மேலும் புதுக்கோட்டை அரசு உயர் துவக்கப்பள்ளி மாணவர்களுக்குசீருடைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார், இவ்விழாவில் லயன்ஸ் பக்தவச்சலம் லயன்ஸ் வீரபாண்டி லயன்ஸ் ராஜராஜன் லயன்ஸ்சக்திவேல் லயன்ஸ் சத்தியமூர்த்தி,லயன்ஸ்தர்மா லயன்ஸ்சசிகுமார் லயன்ஸ் வழக்கறிஞர் பர்வின்பானு லயன்ஸ் அபிராமி லயன்ஸ் தக்ஷிணாமூர்த்தி லயன்ஸ் ராமசாமி லயன்ஸ் வெங்கடேசன் லயன்ஸ்முத்துக்குமார் லயன்ஸ்பாரி,லயன்ஸ் பாண்டிவேல் லயன்ஸ் ராமமூர்த்திராம்பிரகாஷ்மற்றும் பல்வேறு மாவட்டங்களின் லயன்ஸ்சங்க நிர்வாகிகள் கல்வியாளர்கள்,சமூக அமைப்பினர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ‘மாமன்னன்’ படம் பார்த்து மாரி செல்வராஜை கட்டித் தழுவி பாராட்டிய முதல்வர் ஸ்டாலின்



சென்னை, ஜூன். 30- ‘மாமன்னன்’ படம் பார்த்த முதல்வர் மு.க.ஸ்டாலின் கட்டித் தழுவி பாராட்டியதாக இயக்குநர்மாரிசெல்வராஜ் தெரிவித்துள்ளார். மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின், வடிவேலு நடித்துள்ள படம் ‘மாமன்னன்’. ஃபஹத் ஃபாசில், கீர்த்தி சுரேஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். ரெட் ஜெயன்ட் மூவீஸ் நிறுவனம் படத்தை தயாரித்துள்ளது. தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படம் நேற்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. இந்நிலையில், மாமன்னன் படத்தைப் பார்த்த முதல்வர் மு.க.ஸ்டாலின், தன்னைக் கட்டித் தழுவி பாராட்டியதாகஇயக்குநர் மாரி செல்வராஜ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தனது ட்விட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "மாமன்னனை பார்த்து கட்டித் தழுவி கொண்டாடியமுதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எங்கள் பெரும் நன்றியையும் ப்ரியத்தையும் சமர்பிக்கிறோம்" என்று கூறியுள்ளார்.

### பக்ரீத் பண்டிகையையொட்டி

# புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் நடந்த சிறப்பு தொழுகையில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பங்கேற்பு



புதுக்கோட்டை, ஜூன். 30- பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் பங்கேற்றனர். புதுக்கோட்டையில் ஈத்கா பள்ளிவாசலில் நடைபெற்ற சிறப்பு தொழுகையில் புத்தாடை அணிந்து திரளான முஸ்லீம்கள் பங்கேற்றனர். தொழுகை முடிந்ததும் ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி பண்டிகை வாழ்த்துக்களை பரிமாறி கொண்டனர். இதேபோல குர்பானி கொடுத்தும் மகிழ்ந்தனர். மேலும் சிலர் வீடுகளில் பிரியாணி சமைத்து நண்பர்களுக்குவழங்கினர். அன்னவாசல், இலுப்பூர், முக்கண்ணாமலைப் பட்டி, காலாடிப்பட்டி, பரம்பூர், வயலோகம், குடுமியான்மலை, பெருமநாடு, புல்வயல், மாங்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். அதனை தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவு துவா நடைபெற்றது. இஸ்லாமியர்கள் புத்தாடைஅணிந்துகலந்து கொண்டனர். தொழுகை முடிந்ததும் ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டனர். இதேபோல் முக்கண்ணா மலைப்பட்டி பள்ளிவாசல் திடலில் திரளான முஸ்லிம்கள் ஒன்றுகூடி சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். பின்னர் சிறப்புகூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. அதில் ஊர் நன்மை, உலக நன்மை, மழை பெய்ய வேண்டியும் இறைவனிடம் துவா கேட்கப்பட்டது. முக்கண்ணா மலைப்பட்டி தவ்ஹீத் ஜமாத்சார்பில்திடலிலும், அன்னவாசல்பல்லூரணி அருகே உள்ள திடல் போன்ற இடங்களில் சிறப்பு தொழுகை நடைபெற்றது. கீரனூர் பகுதி முஸ்லிம்கள் திருச்சி சாலையில் உள்ள ஈத்கா மைதானத்தில் சிறப்பு தொழுகை நடத்தினர். பின்னர் ஊர்வலமாக புறப்பட்டு கடைவீதி வழியாக ஜும்மா பள்ளிவாசலை அடைந்தனர். அங்குசிறப்பு பிரார்த்தனை செய்து, ஏழை, எளியவர்களுக்கு குர்பானி வழங்கினர். திருவரங்குளம், மேட்டுப்பட்டி, கைக்குறிச்சி, குளவாய்ப்பட்டி, வல்லத்திராகோட்டை, மழவராயன்பட்டி ஆகிய இடங்களில் உள்ள பள்ளிவாசலில் முஸ்லிம்கள் சிறப்பு தொழுகை நடத்தினர். பொன்னமராவதியில் சேரராபட்டி, இந்திராநகர், நாட்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் சிறப்பு தொழுகை நடத்தினர். ஆலங்குடி ஈத்கா மைதானத்தில் முஸ்லிம்கள் சிறப்பு தொழுகை நடத்தினர். பின்னர் அனைவரும் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர். இதேபோல் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் முஸ்லிம்கள் சிறப்பு தொழுகை நடத்தினர்.



காரைக்கால் மாவட்டத்தில் புதுவை அரசு தொழிலாளர் துறை திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ் வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்ப மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் புதுவை மாநில கூட்டுறவு கைவினை மற்றும் கைத்தறி இணையம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காகிதப்பை தயாரிக்கும் பயிற்சி நிறைவு பெற்றதை முன்னிட்டு இதன் நிறைவு விழாவில் போக்குவரத்து துறை சந்திர பிரியங்கா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சியினை நிறைவு செய்த பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் ராகினி இணை தொழிலாளர் ஆணையர் மற்றும் மேரி ஜோஸ்பின் லேபர் ஆபிஸர் மற்றும் மேலான் இயக்குநர் ஷ்யாம் சுந்தர் மேலும் துறையின் அதிகாரிகளும் பயிற்சி பெற்ற கைவினைஞர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களுக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சான்றிதழ் வழங்கினார்



புதுச்சேரி மாநிலம் தொழிலாளர் துறை சார்பாக காரைக்கால் மாவட்டத்தில் தொழில் பழகுனர் பயிற்சி நிலையம் நடத்தும் பாரத பிரதமர் தேசிய,தொழில் பழகுனர் பதிவு மற்றும்.சேர்க்கை முகாம் திருப்பட்டினம் ஆண்கள் தொழிற்பயிற்சி வளாகத்தில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தொழில் பழகுனர் பயிற்சி நிலைய அதிகாரி சுகுணா ஆண்கள் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் சிவக்குமார் ஆண்கள் தொழில் பயிற்சி நிலைய முதல்வர் முத்துக்குமார் மற்றும் ஏராளமான மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். மேலும் இந்நிகழ்வில் தொழில் நிறுவனங்களான ஆண்கள் மற்றும் பெண்கள் பாலிடெக்னிக் மற்றும் கோத்ரேஜ், குளோரைடு கம்பெனி, வைகை கம்பெனி, போன்ற முன்னணி நிறுவனங்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நேற்று நடைபெற்ற பயிற்சி வகுப்பில் 210 மாணவர்கள் பதிவிட்டதன் அடிப்படையில் 15 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான பணியானையினை நிரவி - திருப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் வழங்கினார்.



காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட மூன்று சாலைகளை ரூபாய் 48,05,250/= செலவில் பருத்திக்குடி சாலையும், ரூபாய் 75,55,250/= செலவில் அகர மாங்குடி சாலையும், மேலும் ரூபாய் 33,98,800/= செலவில் அன்டுரேட் சாலையும் ஆகிய சாலைகளை ஆதிதிராவிடர் நலத்துறை சிறப்பு கூறு நிதியிலிருந்து மொத்தம் 1.58 கோடி மதிப்பீட்டில் 5 கிலோ மீட்டர் தூரம் கொண்ட புதிய தார் சாலை பேட்கோ மூலம் சாலைப்பணிகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து மற்றும் ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் பெயர் பலகையை திறந்து வைத்து இந்த மூன்று சாலைகளையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஆதிதிராவிடர் நலத்துறை உதவி இயக்குநர் மதன்குமார் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஊர் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# சீர்காழி அருகே ஆலங்காடு கிராமத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்



சீர்காழி, ஜூன். 30- சீர்காழி அருகே ஆலங்காடு கிராமத்தில் கலைஞரின் நூறாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு கால்நடை மருத்துவ முகாம். மாவட்ட ஆட்சியர் மகாபாரதி முகாமை துவக்கி வைத்தார். மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழி அருகே ஆலங்காடு ஊராட்சியில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மகாபாரதி மற்றும் சீர்காழி திமுக சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் முகாமை துவக்கி வைத்தனர். தொடர்ந்து கால்நடைகளுக்கு வழங்கப்படும்சிகிச்சைகள் குறித்தும் அங்கு அமைக்கப்பட்டிருந்த கால்நடை அபிவிருத்தி சிறப்பு அரங்குகளை பார்வையிட்டு கேட்டறிந்தனர். கால்நடை வளர்ப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வுஏற்படுத்தும் ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த கால்நடை வளர்க்கும் பொதுமக்கள் தங்கள் கால்நடைகளுடன் வந்து மருத்துவ சிகிச்சை பலன் பெற்றனர்.

# சளிக்கு சிகிச்சைக்கு சென்ற சிறுமிக்கு நாய்க்கடி ஊசி செவிலியர் சஸ்பெண்ட்!

கடலூர், ஜூன்,30 சளி சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்ற சிறுமிக்கு நாய்க்கடி ஊசி போட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஊசி போட்ட உடன் அந்த சிறுமி மயக்கமடைந்ததால், அதே மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். இந்நிலையில், சிறுமிக்கு தவறாக ஊசி போட்ட செவிலியர் கண்ணகியை, அலட்சியமாக செயல்பட்டதாக மருத்துவமனை பொறுப்பு இணை இயக்குநர் சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளார்.

# புதுச்சேரியில் அமைச்சர் சாய் ஜெ சரவணன் குமார் நேரு நகரில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்தை திடீர் ஆய்வு



புதுச்சேரி, ஜூன். 30- புதுச்சேரி குடிமை பொருள் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் மேலும் தீயணைப்பு துறை அமைச்சர் சாய் ஜெ சரவணன் குமார் நேற்று நேரு நகரில் அமைந்துள்ளதீயணைப்பு நிலையத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரும் பணியில் இருந்தது குறிப்பிடத்தக்கது. அமைச்சர் தீயணைப்பு வாகனங்களை பார்வையிட்டார். மேலும் அலுவலகத்தின் பல்வேறு இடங்களை பார்வையிட்டார். மேலும்காரைக்காலில் தீயணைப்பு துறை சிறப்பாகசெயல்படுகிறது என்றுஅமைச்சர்கூறினார். மேலும் புதுவை முதல்வர் இந்த பட்ஜெட்டில் தீயணைப்புத் துறையை மேம்படுத்த 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி உள்ளார். என்றும் இதன் மூலம் நவீனகரமான தீயணைப்பு வாகனங்கள் வாங்கப்படும் என்று கூறிய அமைச்சர் தீயணைப்பு துறையில் புதியதாக70பணியிடங்கள் நிரப்பப்படும் எனவும் அதில் பெண்களுக்கு 17 பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். இந்தியாவிலேயே புதுவை மாநிலத்தில் பெண்களுக்குதீயணைப்புத் துறையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது சிறப்பு வாய்ந்த ஒன்று என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் தீயணைப்பு அதிகாரி மாரிமுத்து மற்றும் அலுவலக ஊழியர்கள் உடன் இருந்தனர்

# சங்கரன்கோவிலில் ஆன்லைன் சூதாட்டத்தால் ரூ.15 லட்சத்தை இழந்த வங்கி ஊழியர் தற்கொலை

தென்காசி, ஜூன். 30- தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள வடக்குப்புதூர் வடக்கு தெருவை சேர்ந்தவர் மாரிராஜா மகன் மாரிச்செல்வம். (வயது 25), தனியார் வங்கி ஊழியர், மாரிச்செல்வம் கடந்த இரண்டு வருடமாக ஆன்லைன் சூதாட்டத்தில் ரூபாய் 15 லட்சம் இழந்ததாக கூறப்படுகிறது. இதனால் மன வேதனை அடைந்த மாரிச்செல்வம் நேற்று முன்தினம் இரவு வீட்டில் விஷம் குடித்து மயங்கிய நிலையில் இருந்தார், மயங்கிய நிலையில் இருந்த மாரிச்செல்வம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று மாரிச்செல்வம்பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து சங்கரன்கோவில்



தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர், ஆன்லைன் சூதாட்டத்திற்கு தமிழகத்தில் தடை விதிக்கப்பட்ட போதிலும் ஆன்லைன் சூதாட்டத்தினால் பணத்தை இழந்து தற்கொலை செய்து கொள்ளும் நிலை தொடர்கிறது என்பது வேதனை அளிக்க கூடியதாக உள்ளது.

# தென்காசி இலஞ்சி குமாரர் கோயிலில் முழு காப்பு நிகழ்ச்சி

தென்காசி, ஜூன். 30- தென்காசி மாவட்டம் இலஞ்சியில் பிரசித்தி பெற்றதிருக்கோவில்களில் ஒன்றான இலஞ்சி திருவிலஞ்சிகுமாரர் கோவில் ஆகும். இங்கு ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் நவமி திதி அன்றுமுழுகாப்புநிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு நவமி திதி முழுக்காப்புநிகழ்ச்சிநேற்று தென்காசி அய்யாபிள்ளை குடும்பத்தினர்களால் நடத்தப்பட்டது. அன்று காலை முருகனுக்கு 18 வகையான அபிஷேகங்கள் நடைபெற்று சிறப்பு அலங்காரம்செய்யப்பட்டு உச்சிகால தீபாராதனை நடைபெற்றது. அதன் பின்னர் பக்தர்களுக்குபிரசாதங்கள்



வழங்கப்பட்டன, இந்நிகழ்ச்சியில் ராஜம்மாள், ஏஜிளம். கணேசன், மாலா, சுந்தரி, சீதாலட்சுமி, ராஜா, உமாதேவி, சரோஜா, சங்கர நாராயணன், ராஜன், ராணி,சாந்தி பேபி அரசப்பன், முத்துக்குமாரசாமி, கண்ணன், மணிசங்கர், மனோகர், பவானி, பரமசிவன், வசந்தி, சுப்பிரமணியன், புவனா, ஆவுடையப்பன், அன்னம்மாள், கார்த்தி, சுப்பிரமணியன்,சரஸ்வதி, செந்தில், முத்து, ஸ்வேதா, மைக்ரோ கம்யூட்டர்ஸ் சீத்தாராமன், ஸ்ரீகலா, ஸ்ரீ வில்லிபுத்தூர் மருத்துவர் சிதம்பர நடராஜன், ராஜம், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# ஆயப்பாடி பள்ளிவாசலில் பக்ரீத் பண்டிகை சிறப்பு தொழுகை

தரங்கம்பாடி, ஜூன் 30: மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா பொறையார் அருகே உள்ள ஆயப்பாடி பள்ளிவாசலில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு தொழுகையில் ஏராளமான இஸ்லாமியர்கள் ஈடுபட்டனர். தமிழகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்கள் பக்ரீத் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடினர். இஸ்லாமிய இறைத்தூதர்களில் முக்கியமானவர்களின் ஒருவராக கருதப்படுபவர் இப்ராஹிம். இறைவனின் கட்டளையை ஏற்று தனது ஒரே மகனான இஸ்மாயிலை பலியிடத் துணிந்த இறைத்தூதர் இப்ராஹிமின் தியாகத்தை உலகுக்கு உணர்த்தும் விதமாக பக்ரீத் பண்டிகை





கொண்டாடப்படுகிறது. பக்ரீத் பண்டிகையையொட்டி இஸ்லாமியர்கள் புத்தாடை அணிந்து அதிகாலை முதலே மசூதிகளில் குவிந்தனர். தொழுகைக்கு பிறகு ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி பக்ரீத் வாழ்த்துகளை பகிர்ந்துகொண்டனர். மேலும், ஏழைகளின் பசியைப் போக்கும் வகையில் ஆடு, மாடு உள்ளிட்டவற்றை பலியிட்டு ஏழை எளிய மக்களுக்கு வழங்கினர். மேலும் உறவினர்கள், நண்பர்களுக்கு உணவு வழங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பள்ளி வாசல்களில் சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டு பக்ரீத் வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டனர். சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பக்ரீத் சிறப்புத் தொழுகைக்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பலர் கலந்துகொண்டு சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டனர். உலகப் புகழ் பெற்ற நாகூர் தர்கா உள்ளிட்ட பல்வேறு மசூதிகளில் இஸ்லாமியர்கள் பக்ரீத் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். பக்ரீத் பண்டிகையையொட்டி தரங்கம்பாடி தாலுக்கா ஆயப்பாடி, பொறையார், சங்கரன்பந்தல், வடகரை, ஆக்கூர், திருச்சம்பள்ளி, கிளியனூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பள்ளிவாசலில் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு தினமும் ஐந்துவேளையும் தொழுதல், தர்ம காரியங்கள் அதிகம் செய்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டனர். ஆயப்பாடி ஜாமிஆ மஸ்ஜித் பள்ளிவாசலில் முத்தவல்லி பஷீர் அகமது, செயலாளர் நூருல்லாஹ், பொருளாளர் ஹலில் ரகுமான், இமாம் கமாலுதீன், திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல்மாலிக், விசிக மாநில இஸ்லாமிய பேரவை துணை செயலாளரும், சமூக நல செயற்பாட்டாளருமான முஜிபுர்ரகுமான்உள்ளிட்ட இஸ்லாமியர்கள் ஏராளமானோர் புத்தாடை அணிந்து சிறப்பு தொழுகையில் பங்கேற்றனர்.





தமிழக இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் வெளியாகி இருக்கக்கூடிய மாமன்னன் திரைப்படம் புதுக்கோட்டை ஆர்கேபி திரையரங்கில் நேற்று திரையிடப்பட்டது. முதல் காட்சியை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், எம்.எல்.ஏ.முத்துராஜா, மாநிலங்களவை உறுப்பினர் அப்துல்லா, திமுக நிர்வாகிகள் கவிதை பித்தன், டாக்டர் முத்துகருப்பன், செந்தில் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று பார்வையிட்டனர்.

# புதுக்கோட்டை ஆவின் பால் நிறுவனத்தில் அமோனியம் கேஸ் வெளியேறியதால் தொழிலாளர்கள் பாதிப்பு

புதுக்கோட்டை, ஜூன். 30-

புதுக்கோட்டை ஆவின்பால்நிறுவனத்தில் எதிர்பாராத விதமாக அமோனியம் கேஸ் வெளியேறியதால் தொழிலாளர்களுக்கும் அப்பகுதி பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டதால் பரபரப்பு நிலவியது.





புதுக்கோட்டை ஆவின்பால்நிறுவனத்தில் பால் குளிரூட்ட பயன்படுத்தப்படும் குழாயிலிருந்து அமோனியம் கேஸ் வெளியேறியதால் தொழிலாளர்கள் உடனடியாக நிறுவனத்துக்குள் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக கண் எரிச்சல் மூச்சுத் திணறல் உள்ளிட்டவைகளால் அப்பகுதி மக்கள் பாதிப்புக்குஉள்ளாகினர். இதனையடுத்து அங்கு வந்த தீயணைப்பு துறையினர் துரிதமாக செயல்பட்டு கேஸ் வெளியேறும் வால்வை கண்டறிந்து அதனை அடைத்ததால் பெரும் அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பாக்கெட் தயார் செய்து ஏற்றுமதி செய்யப்படும் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் நாள் ஒன்றுக்கு 64 ஆயிரம் லிட்டர் பால் தயார் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் சூழலில் இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றிவருகின்றனர். இந்நிலையில் நேற்று மதியம் இந்த ஆவின் நிறுவனத்தில் பால் குளிரூட்டப்படும் இயந்திரத்திற்கு செல்லும் அலுமினிய குழாயில் இருந்து அமோனியம் கேஸ் வெளியேறியுள்ளது. இந்நிறுவனத்திற்கு உட்பகுதிமுழுவதும்கேஸ் வெளியேறியதால் மூச்சு திணறல் கண் எரிச்சல் உள்ளிட்டவைகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் உடனடியாகதொழிற்சாலை விட்டு வெளியேறினர். மேலும் அந்த பகுதி முழுவதும் அமோனியம் கேஸ் வெளியேறியதால் அப்பகுதி மக்களும் பாதிப்புக்குஉள்ளாகினர்.

இதன்பின் தகவலின் பெயரில் அங்கு வந்த தீயணைப்புத்துறையினர் விஷ வாயு தடுப்பு பாதுகாப்பு கவசங்களை அணிந்தவாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்குள் சென்று முக்கால் மணிநேரத்திற்கு மேலாக போராடி கேஸ் வெளியேறும் வல்வு பகுதியை கண்டறிந்து அதனை அடைத்தனர். இருந்த போதிலும் அமோனியம் கேஸ் வெளியேறியதற்கான காரணத்தை கண்டறிந்து அதனை சரி செய்வதற்காக திருச்சி மற்றும் மதுரையில் இருந்து தொழில் நுட்ப வல்லுனர்களும் வரவழைக்கப்பட்டு அவர்களும் எவ்வாறு அமோனியம் கேஸ் வெளியேறியது என்பது குறித்து ஆய்வு செய்து வருவதோடு குழாய்களை ஆய்வு செய்யும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தசம்பவம் குறித்து ஆவின் புதுக்கோட்டை மாவட்ட பொது மேலாளர் தங்கமணி கூறுகையில் : அமோனியம் கசிவு ஏற்பட்ட உடனேயே பணியில் இருந்த தொழிலாளர்களை வெளியேற்றி விட்டோம். இது போன்ற வாயு கசிவு இதற்கு முன்னதாக ஏற்பட்டது இல்லை, பால் குளிரூட்டும் நிலையத்திற்கு செல்லும் குழாய்வால்வில்ஏற்பட்ட கசிவால் தான் அதிக அளவில் அமோனியம் கேஸ் வெளியேறி உள்ளது,தீயணைப்புத் துறையினர் துரிதமாக செயல்பட்டு வாய்வு கசிவை அடைத்து விட்டனர். அடுத்ததாக திருச்சி மற்றும் மதுரையில் இருந்து வரும் தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் சம்பந்தப்பட்ட வாழ்வு சரி செய்யப்பட்டு மீண்டும் பால் உற்பத்தி தொடங்கப்படும், இனிமேல் இது போன்ற ஒரு பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# தென்காசி அருகே கல்குவாரியில் மிரட்டி பணம் பறிக்க முயன்ற 3 போலி நிருபர்கள் கைது

தென்காசி, ஜூன். 30-

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள கல்குவாரியில் பணம் கேட்டு மிரட்டிய மதுரை பகுதியை சேர்ந்த 3 போலி பத்திரிகை நிருபர்களை போலீசார் கைது செய்துள்ளனர்,



தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள அரியூரில் பிரேம்குமார் என்பவர் அரசு அனுமதி பெற்று கல்குவாரி நடத்தி வருகிறார். இந்த கல்குவாரிக்கு மதுரை ஏழுமலை பகுதியை சேர்ந்த செல்லமுத்து என்பவரது மகன் வினோத்குமார் (வயது 31), இவர் பி.பி.சி.யின் செய்தியாளர் என்றும், உசிலம்பட்டியை சேர்ந்த பிரபுராஜன் (வயது 38), இவர் மதுரை மாவட்ட தகவல் மற்றும் சட்ட முன்னணியின் மாவட்டத் தலைவர் என்றும், உசிலம்பட்டி பகுதியைச் சேர்ந்த காசிராஜன் என்பவரது மகன் சவுந்தரபாண்டி (வயது21), ஆகிய மூவரும் நாங்கள் அனைவரும் பிரபலசெய்தியாளர்கள். உங்கள் கல் குவாரி சட்ட விரோதமாய் இயங்குகிறது. அது பற்றிய செய்தியை வெளியிடாமல் இருக்க பணம் கொடுங்கள் என மிரட்டியுள்ளனர்.

இது தொடர்பாக குவாரி ஊழியர்கள் கொடுத்த தகவலையடுத்து அங்கு வந்த புளியங்குடி போலீசார் அவர்கள் மூன்று பேர்களிடமும் விசாரணை நடத்தினர் விசாரணையில் முன்னுக்குப்பின் முரணாக பேசிய அவர்கள் 3 பேர்களும் போலி நிருபர்கள் என்பது தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர், அவர்களிடமிருந்து போலி அடையாள அட்டைகளை போலீசார் பறிமுதல் செய்தனர்.இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஆலங்குடி அருகே இடி தாக்கி பெண் பரிதாப பலி

ஆலங்குடி, ஜூன். 30-

ஆலங்குடி அருகே கொத்தமங்கலம் சிதம்பர விடுதியில் வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்த பெண்ணை இடி தாக்கியதில் பரிதாபமாக உயிரிழந்தார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா கொத்தமங்கலம் சிதம்பர விடுதியை சேர்ந்தவர் கோபி, இவரது மனைவி வித்யா (27), இவர் நேற்று மாலை தனது வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்தார், அப்போது அந்தப் பகுதியில் லேசான மழை பெய்துகொண்டிருந்தது. திடீரென அந்தப் பகுதியில் சத்தமாக இடி தாக்கியது. இதில் வித்யா மீது இடி தாக்கியதில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இது குறித்து வழக்கு பதிவு செய்த கீரமங்கலம் காவல்துறையினர் வித்யாவின் உடலை மீட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர், வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்த பெண்ணை இடிதாக்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அந்தப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

# பூதிநத்தம் அகழாய்வில் கிடைத்த புதிய கற்கால கருவி: தங்கம் தென்னரசு பகிர்வு

சென்னை, ஜூன். 30-

பூதிநத்தம் அகழாய்வில் புதிய கற்கால கருவிகள் கிடைத்துள்ளதாக அமைச்சர்தங்கம்தென்னரசு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக தனதுட்விட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், “தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்திற்குட்பட்ட பூதிநத்தம் என்னும் கிராமத்தில் தமிழக அரசு தொல்லியல் துறையால் கடந்த ஏப்ரல் மாதம் 6-ம் தேதி முதல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வகழாய்வில் இதுவரை 17 அகழாய்வு குழிகள் தோண்டப்பட்டு 52-க்கும் மேற்பட்ட தொல் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் கடந்த 10.06.2023 அன்றுகண்டெடுக்கப்பட்ட கற்கருவியானதுC9என்னும் அகழாய்வு குழியில் சுமார் 36 செ.மீ. ஆழத்தில் கிடைக்கப்பெற்றது.

தற்போது அதேபோன்ற மற்றொரு கற்கருவி D9 என்னும் அகழாய்வு குழியில் 28.06.2023 அன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கருவியின்முனைமிகவும் மழுங்கியும் உடைந்தும் காணப்படுவதால் இக்கருவியினை கொண்டு மரத்தினை வெட்டவோ அல்லதுவேட்டையாடவோ பயன்படுத்தி இருக்கலாம் என கருத முடிகிறது.

மேலும், இக்கற்கால கருவிகள் புதியகற்காலத்தில் நிலத்தினைஉழும்வகையில் ஏர்க்கலப்பையாகவும், வெட்டுவதற்கு கோடரியாகவும் பயன்பட்டிருக்கக்கூடும். இக்கருவி டோலராய்ட் (Doloraid) என்னும் மூலக் கல்லினை கொண்டு செய்யப்பட்டுள்ளது.

பூதிநத்தம் கள ஆய்விலும், அகழாய்விலும் இதுவரை மொத்தமாக 6 புதிய கற்கால கருவிகள் வெவ்வேறு அகழாய்வு குழிகளில் வெவ்வேறு ஆழத்தல் கிடைத்துள்ளன. தொடர்ச்சியாக புதிய கற்காலகருவிகள்கிடைக்கப் பெறுவதாலும் இதனுடன் சங்குவளையல்துண்டுகள், கண்ணாடி வளையல் துண்டுகள், தக்களி, வட்ட சில்லுகள், சூது பவள மணிகள், கண்ணாடி மணிகள், சுடுமண்ணலான உருவங்கள் கிடைக்கப் பெறுவதாலும் இப்பகுதி இடைக்கால வரலாற்று தொடக்க காலத்தினை சார்ந்தாககருதலாம்.மேலும் இடைக்காலத்திலும் புதிய கற்கால கருவியானது தொடர்ச்சியாக இப்பகுதியில்பயன்பாட்டில் இருந்திருக்கலாம் எனவும் கருத முடிகின்றது” என்று அவர் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் 6 மாவட்டங்களில் வெளுக்கப்போகும் கனமழை



சென்னை, ஜூன். 30-

ஜூலை 3-ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல் மற்றும் தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த 48 மணி நேரத்திற்குவானம்ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும்.

01.07.2023: தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அந்தமான் கடல் பகுதிகள், தெற்குஇலங்கை கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள், மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

02.07.2023: தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வடதமிழக கடலோரப்பகுதிகள், இலங்கை கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், ஆந்திர கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

03.07.2023: தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகள், தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள் அதனை ஒட்டிய மத்திய வங்கக்கடல், அந்தமான் கடல் பகுதிகள், ஆந்திர கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

**அரபிக்கடல் பகுதிகள்:**

29.06.2023 முதல் 03.07.2023 வரை: இலட்சத்தீவு பகுதிகள், கேரள-கர்நாடக கடலோரப்பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்த படுகிறார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜி நீக்கம் ஆளுநர் ஆர்.என்.ரவி உத்தரவு

சென்னை, ஜூன். 30-

தமிழக அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜி நீக்கம் செய்து தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி உத்தரவிட்டுள்ளார். அவர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவிநீக்கம்செய்துள்ளார்.



இது தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "அமைச்சர் செந்தில் பாலாஜி, வேலை வாங்கி தருவதாக பணமோசடி செய்தது உள்ளிட்ட பல்வேறு ஊழல் வழக்குகளில், கடுமையான கிரிமினல் வழக்குகளை எதிர்கொண்டுள்ளார். அமைச்சர் பதவியை தவறாகபயன்படுத்தி, தன் மீதான விசாரணைக்கும் அவர் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறார். தற்போது நீதிமன்ற காவலில் அமலாக்கத் துறை விசாரணையில் உள்ளார்.

அதுமட்டுமில்லாமல், தமிழககாவல்துறையிலும் அவர் மீது சில வழக்குகள் உள்ளன. இதனால் செந்தில் பாலாஜி அமைச்சரவையில் தொடர்ந்தால் அரசு இயந்திரத்தின்செயல்பாடு பாதிக்கப்படும். எனவே, உடனடியாக அவரை அமைச்சரவையில் இருந்து ஆளுநர் ஆர்.என்.ரவி நீக்கியுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே செய்தியாளர்களை சந்தித்த தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆளுநரை குறிப்பிட்டு அவருக்கு அதிகாரம் கிடையாது என்றும் சட்டரீதியாக சந்திப்பதாகவும் தெரிவித்தார்.

# “எங்களுக்குள் அண்ணன், தங்கை பிரச்சினைதான்” புதுச்சேரி முதல்வர் குறித்து ஆளுநர் தமிழிசை விளக்கம்

புதுச்சேரி, ஜூன். 30-

கண் சிகிச்சை நிபுணர்களின் கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் நீரிழிவு நோயினால் ஏற்படும் கண்பார்வைக் குறைபாடுகளைக் கண்டறிந்து கண்பார்வை இழப்பைத் தடுத்தல் தொடர்பான கருத்தரங்கு இந்திரா காந்தி அரசு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது.



ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் மொபைல் போன் வசதியுடன் இயங்கும் கண் பரிசோதனை கருவியை அறிமுகம் செய்து வைத்தார். இதில் சுகாதாரத்துறைச்செயலர் உதயகுமார், இயக்குநர் ஸ்ரீராமலு மற்றும் மருத்துவ நிபுணர்கள் பங்கேற்றனர். பின்னர் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், செய்தியாளர்களிடம் கூறியதாவது: ”கேரளா, மகாராஷ்டிராவின் சில பகுதிகளில் செல்போன் மூலம் இயக்கப்படும் எளிய கருவி மூலம் சர்க்கரை வியாதியானால் ஏற்படும் பார்வை இழப்பை சரி செய்து வருகின்றனர். இந்த முறையை புதுச்சேரியிலும் பயன்படுத்த இருக்கிறோம். கண்பார்வை இழப்பு இல்லாத, ஒளிமயமான புதுச்சேரியை உருவாக்க அத்தனை முயற்சிகளும் எடுக்கப்படுகிறது. ஏற்கனவே டிபி இல்லாத புதுச்சேரியை உருவாக்க தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது” என்றார்.

அண்ணன், தங்கை பிரச்சனைதான்: அப்போது நிர்வாகரீதியாக தன்னால் எதுவும் செய்ய முடியவில்லையே என முதல்வர் கூறியுள்ளது குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது,”எங்களுக்குள் இருப்பது அண்ணன், தங்கை பிரச்னைதான். முதல்வரோடு இணைந்துதான் செயல்படுகிறேன். என்னைப்பற்றி அவர் சொல்லியிருக்க மாட்டார் என்றுதான் சொல்கிறேன்.

பெஸ்ட் புதுச்சேரி போன்று பாஸ்ட் புதுச்சேரியாக இருக்க வேண்டும். இதற்கு எல்லா கோப்புகளையும்விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும். சில அதிகாரிகளிடம் பிரச்னை இருக்கிறது. நான் பிரச்னையே இல்லை என்று சொல்லமாட்டேன். இதனை தீர்க்க முதல்வரும், நானும் முயற்சி செய்வோம். முதல்வருடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினோம். சில அதிகாரிகள் கோப்புகளை தாமதப்படுத்துகிறார்கள், இது விரைவில் சரி செய்யப்படும். அதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறோம். சில அதிகாரிகள் நாம் நினைக்கிற மாதிரி பணி செய்யவைக்கமுடியும். சில அதிகாரிகள் அவர்களுக்கு அந்த நேரத்தில் சரி என பட்டதை செய்து விடுகிறார்கள். இது பொது வெளியில் தவறாக போய்விடுகிறது.


எல்லா இடங்களிலும் நிர்வாகத்தில் இதுபோன்ற சுணக்கங்கள் இருக்கத்தான் செய்கிறது. இதனை சரி செய்ய வேண்டியது நம்முடைய பொறுப்பு. புதுச்சேரி யூனியன் பிரதேச பகுதி என்பதால் உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. நீதிமன்றமும் சில வழிமுறைகளைகூறியுள்ளது. முற்றிலுமாக இதனை மீற முடியாது. தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களுக்கு வேலைக்கு எடுப்பதில் சட்ட விதிமுறைகள் இருக்கிறது. அதே நேரத்தில் புதிதாக படித்து வேலைக்கு காத்திருக்கும் இளைஞர்களுக்கும் அநீதி இழக்கக் கூடாது. இதையெல்லாம் நடுநிலையோடு பார்த்து செய்ய வேண்டும்” என்று தெரிவித்தார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கிரிமினல் வழக்குகள் அதிகம் செந்தில் பாலாஜியை நீக்கினார் ஆளுநர்

# இறையன்பு இன்று ஓய்வு:தலைமை செயலாளராக சிவ்தாஸ் மீனா நியமனம்





# மணிப்பூரில் மீண்டும் வன்முறை 3 பேர் பலி :ராகுல் தடுத்து நிறுத்தம்


சென்னை / புதுக்கோட்டை | 30.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

30.06.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சிந்தாமணி நாகேச இராமச்சந்திர ராவ் , இந்திய வேதியியலாளர் (பி.1934)



ராஜ ஸ்ரீகாந்தன் , ஈழத்து எழுத்தாளர் (பி.1948) (இ.2004)



சனத் ஜயசூரிய , இலங்கைத் துடுப்பாளர் (பி.1969)



## இன்றைய நினைவு நாள்

தாதாபாய் நெளரோஜி, இந்திய அரசியல் சமூகத் தலைவர், பார்சி கல்வியாளர், பருத்தி வணிகர் (பி.1825) (இ.1917)



சாகிப் சிங் வர்மா , தில்லியின் 4வது முதல்வர் (பி.1907) (இ.1966)



விந்தன் , தமிழக எழுத்தாளர் (பி.1916) (இ.1975)



## சிறுகோள் நாள்